# களப்பயணம் செல்வோம்

சமச்சீர் கல்வி, தமிழ், வகுப்பு 5, பருவம் 3, பாடம் 1

**மாணவர்கள் வெவ்வேறு வகையான தொழிலாளர்களைப் புரிந்து கொள்ளும்படியான களப்பயணத்தைத் திட்டமிடல்!**

நல். கருணாநிதி
இரா.கார்த்திகேயன்

## ஈடுபடுதல்:

- மாணவர்களின் பெற்றோர்கள் செய்யும் தொழில் மற்றும் வேலைகளைப் பற்றிக் கேட்டு விவசாயம் கூலிவேலை மற்றும் பிற வேலைகள் பற்றிய உரையாடலை நடத்துதல்.
- அதோடு அவர்களுக்கு உணவு எவ்வாறு கிடைக்கிறது என்பது பற்றிய கலந்துரையாடல் நடத்துதல். இக்கலந்துரையாடலில் உணவுத்திருவிழா பாடத்தையும் நினைவுகூறுதல்.

## ஆராய்தல்:

- விவசாயம் தொடர்பாக மாணவர்கள் தெரிந்துகொள்ள விரும்பும் தகவலைப்பெற, அவர்களே குழுவாக அமர்ந்து, கேள்விகளைத் திட்டமிடவேண்டும். இக்கேள்விகளுக்கான பதிலைப் பெற்றோர்கள்/ பக்கத்து வீட்டுக்காரர்/ தாத்தா பாட்டியிடம் கேட்டு பதில் அறிந்து வரும்படிச் செய்தல்.
- அல்லது இங்கு நாங்கள் செய்துபார்த்தது போல் மாணவர்கள் வெவ்வேறு வகையான தொழிலாளர்களைப் புரிந்து கொள்வதற்கான களப்பயணத்தை மேற்கொள்ளுதல்.

## விளக்குதல்:

- தொழிலாளர்களைப் பற்றி அவர்கள் அறிந்துகொண்ட விதத்தை மனதில் வைத்து, அதனடிப்படையில் பாடத்தை வாசிக்கச் சொல்ல வேண்டும். மாணவர்கள் வாசிக்கும்பொழுது உரையாடல் வாசிப்பிற்கான நுட்பங்களை மனதில் கொள்ளவேண்டும். அவற்றை மாணவர்களுக்கு விளக்கி, செய்துகாட்டி வாசிக்க ஊக்கப்படுத்தவேண்டும்.
- பாடத்தை வாசித்த மாணவர்களுக்கு, உழவர் உதவியகம், வயல்வெளியிலுள்ள விவசாயி/ விவசாயக் கூலித்தொழிலாளர்கள் மற்றும் இயற்கை விவசாயம் செய்பவர்கள் ஆகியோரை நேரில் கண்டு உரையாடும் அனுபவத்தை ஏற்படுத்துதல். இவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களிடம் ஆசிரியர் பாடத்தைப் பற்றி விளக்கித் தான் எதிர்பார்க்கும் விஷயங்களைப் பேச முன் தயாரிப்பு செய்தால் நன்றாக இருக்கும். அதோடு மாணவர்களுடன் அமர்ந்து ஒவ்வொரு பயணம் மற்றும் சந்திப்பிற்கு முன், தயாரிப்பில் ஈடுபடுவதும் அவசியம். விவசாயம் பற்றி என்னென்ன கேள்வி கேட்கப் போகிறோம் என்பதைப் பட்டியலிடுவதும் யார் யார் கேட்பது என்பதை முறை படுத்துவதும் நல்லது. அதேபோல் அவர்களுக்குத் தோன்றும் கேள்விகளைக்கேட்க ஊக்கப் படுத்துவதும் அவசியம்.

## விரிவாக்குதல்:

- தாங்கள் கற்ற விஷயங்களைப்பற்றி உரையாடலை நிகழ்த்துதல்.
- விவசாயம் மற்றும் விவசாயிகள் தொடர்பான விஷயங்களை வாசிக்கவைத்தல்

\- அவர்கள் பார்த்த தெரிந்துகொண்ட விஷயங்களைப்பற்றி எழுதத் தூண்டுதல்.

## மதிப்பிடுதல்:

- ஒவ்வொரு மாணவர்களும் விவசாயம் / விவசாயிகள் பற்றி ஒருபக்க அளவில் கட்டுரை எழுதுதல்.
- பாடத்திலுள்ள பயிற்சிகளைச் செய்தல்.

**வகுப்பறை அனுபவத்தில் ஒரு பகுதி**: விவசாயத்தைக் கற்றறியும் மாணவர்கள் மற்ற தொழிலாளர்களையும் அறிந்துகொள்ளும் வகையில் தொழிலாளர்களை அறிவோம் பகுதி பாடத்தில் இணைக்கப்பட்டுள்ளது. நம் ஒவ்வொரு ஊரிலும் விதம் விதமான தொழிலாளர்கள் உள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் உடலுழைப்பு செய்பவர்கள். அவர்களை மரியாதையோடு அணுகவும், அவர்களின் உழைப்பின் முக்கியத்துவத்தை மாணவர்கள் அறிந்து கொள்ளும் வகையிலும் இப்பயிற்சியைத் தயார் செய்தோம்.

- வகுப்பறையில் ஒவ்வொரு மாணவரும் தங்கள் பெற்றோரின் வேலை மற்றும் தொழிலைப் பற்றிப் பகிர்ந்துகொள்ளச் செய்தோம்.
- தொழிலாளர், தொழில் செய்பவர் சேவைப்பணியில் ஈடுபடுபவர் ஆகியவற்றைப் பிரித்துக் கரும்பலகையில் எழுதி வரிசைப் படுத்தினோம்.
- மாணவர்கள் தங்கள் வீடுகளுக்கு/ பள்ளிக்கு அருகாமையிலுள்ள தொழிலாளர்களைப் பெயருடன் குறிப்பிடும்படி கேட்டறிந்தோம்.
- அவர்களில் பள்ளி மாணவர்களிடம் பொறுமையாகப் பதில் சொல்பவரா என அறிந்து தொழிலாளர்களைத் தேர்வு செய்தோம். இதில் ஒருவர் பெண், ஒருவர் விவசாயக் கூலி, ஒருவர் கடையில் பணிபுரிபவர்... என வரிசைப் படுத்தினர்.
- மாணவர்களை 3 நபர் கொண்ட குழுவாகப் பிரித்து, அவர்களுடன் பேசப்போவதற்குத் தயார் செய்து அனுப்பி வைத்தோம்.
- **முதல் குழு**: தொழிலாளர் செய்யும் ஒரு நாள் வேலையைப் பதிவு செய்தனர். உதாரணமாக, 9 மணிக்கு வேலைக்கு வருவேன். வந்ததும் உடை மாற்றிக் கொள்வேன்..... இப்படி “டீ போடுபவர்” பற்றி எழுதியிருந்தனர்.
- **இரண்டாம் குழு**: அவர்கள் தொழிலைப் பற்றி எழுதலாம் என முடிவு செய்தோம். “நான் களை வெட்டுற வேலை செய்கிறேன். கடலக்காடு, நெல் வயலுல எனக்கு வேலை....”
- **மூன்றாம் குழு**: “எங்க கம்பெனி கயிறு திரிக்குற கம்பனி. அதுல எனக்கு மெஷின் இயக்குற வேலை...”
- **நான்காம் குழு**: கலை ஒரு கூலித் தொழிலாளர். அவருக்கு நிறைய வேலைகள் தெரியும். மில்லுக்கு சென்று அரிசி புடைப்பார். கோவிலைச் சுத்தம் செய்யச் செல்வார். சமையலுக்கு உதவி செய்யச் செல்வார். இப்படி அவர் வேலையை...
- தொழிலாளர்களை குழந்தைகள் அணுகிய விதம், அதை அவர்கள் எழுதிய விதம், ஒவ்வொன்றையும் அடுத்தடுத்து செய்த முறை என ஆசிரியர்களாகிய எங்களுக்குப் பெரிய கற்றலாக அமைந்தது.




**நல். கருணாநிதி**, தொ.ப.ஆ, அரசு தொடக்கப் பள்ளி, ஏம்பலம்



**இரா.கார்த்திகேயன்**, தொ.ப.ஆ, அரசு தொடக்கப் பள்ளி, கரையாம்புத்தூர்